பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

03 11 2025 MONDAY 6.30 PM

வணக்கம் - மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தேர்தல்ஆணையம் கூறியுள்ளது.

- தேர்தல் ஆணையத்தின் இப்பணிகள் வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசு வலியுறுத்தியுள்ளது.

- தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

- ஆசிய கோப்பை ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shreyasi Joshi வெண்கலப்பதக்கம் வென்றார்.

>>>>>><<<<<<

வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகள் குறித்து யாரும் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று தேர்தல் ஆணையம், சென்னை உயர்நீதிமன்றத்தில் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான மனுவினை விசாரணை செய்த தலைமை நீதிபதி திரு. எம்.எம். ஸ்ரீவத்ஸவா, நீதிபதி திரு. அருள்முருகன் அமர்வுமுன் தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் இந்த உறுதிமொழியை அளித்தார்.

நாளை முதல் இப்பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

தேர்தல் ஆணையம் இப்பணிகளை, எதிர்பார்த்ததை விட சிறப்பாக மேற்கொள்ளும் என்றும் தேர்தல்ஆணையத்தின் வழக்கறிஞர் உறுதியளித்தார்.

இதனை பதிவு செய்த நீதிபதிகள் இம்மனுக்கள் மீதான விசாரணையை வரும் 13ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தனர்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொள்வது வரவேற்கத்தக்கது என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - எல்.முருகன் 43 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

இதற்கிடையே, தேர்தல் தோல்வி பயம் காரணமாகவே. வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப் பணிகளுக்கு திமுக எதிர்ப்பு தெரிவிப்பதாக த.மா.கா. தலைவர் திரு. ஜி.கே. வாசன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பிரச்சினை தொடர்பாக திமுக தெரிவிக்கும் கருத்துக்களை வாக்காளர்கள் நம்ப தயாராக இல்லை என்றார்.

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் தமிழகத்தில் நிலவுவதாகவும் திரு. ஜி.கே. வாசன் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று கோவையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கோவையில் கல்லூரி மாணவி கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவத்தை சுட்டிக்காட்டினார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களை களைய திமுக அரசு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளாததே இதற்கு காரணம் என்று அவர் தெரிவித்தார்.

போதைப்பொருள் பழக்கத்தை கட்டுப்படுத்தவும் திமுக அரசு தவறிவிட்டதாக திரு. நயினார் நாகேந்திரன் குறை கூறினார்.

>>>>>><<<<<<

பொதுக்கூட்டங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளுக்கான நெறிமுறைகளை வகுப்பது குறித்து விவாதிப்பதற்காக, வரும் 6ஆம் தேதி அனைத்துக் கட்சிக் கூட்டத்திற்கு தமிழக அரசு அழைப்பு விடுத்துள்ளது.

சென்னை தலைமைச்செயலகத்தில் மூத்த அமைச்சர்களின் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

>>>>>><<<<<<

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 35 பேரை உடனடியாக விடுவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் இக்கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாகை மாவட்டத்தைச் சேர்ந்த 31 மீனவர்களும், ராமநாதபுரத்தைச் சேர்ந்த 4 மீனவர்களும் இலங்கை கடற்படையினரால் இன்று கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

இதுபோன்ற கைது சம்பவங்கள் தமிழக மீனவர்களிடையே அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை 114 மீனவர்களும், 247 படகுகளும் இலங்கை வசம் உள்ளதாகவும், இவற்றை மீட்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் திரு. மு.க.ஸ்டாலின் அந்த கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

பாரத ரத்னா சர்தார் வல்லபபாய் பட்டேலின் 150வது பிறந்த தின கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக திருப்பூரில் இன்று ஒற்றுமை பேரணி நடைபெற்றது.

ஒற்றுமையின் வலிமை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த பேரணி நடைபெற்றதாக இதில் பங்கேற்ற மாணவிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – மாணவர்கள் 58 செகண்ட்ஸ்

>>>>>><<<<<<

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஐந்து தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு. செந்தாமரைக்கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.

(சவுண்ட் பைட் - செந்தாமரைக்கண்ணன் 27 செகண்ட்ஸ்)

வங்கக்கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுப்பகுதி மியான்மர் – பங்களாதேஷ் கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்றும் திரு. செந்தாமரைக்கண்ணன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் – செந்தாமரைக்கண்ணன்(2) 17 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

மாவட்டச் செய்திகள்

மதுரை மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திரு. பிரவின் குமார் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். 5 பேர் காயமடைந்தனர்.

>>>>>><<<<<<

செங்கல்பட்டு மாவட்டம், சிங்கப்பெருமாள்கோவில் பகுதியில் புதிய காவல்நிலையம் இன்று திறக்கப்பட்டது.

>>>>>><<<<<<

மலேசியாவிலிருந்து சென்னைக்கு கடத்திவரப்பட்ட 2 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கத்தை சுங்கத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

>>>>>><<<<<<

நாகப்பட்டினத்தில் உள்ள மெய்கண்ட மூர்த்தி சுவாமி திருக்கோவில் குடமுழுக்கு இன்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஆசிய கோப்பை ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shreyasi Joshi வெண்கலப்பதக்கம் வென்றார்.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் Freestyle பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

உலக கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் Narayanan Sunilduth Lyna இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கோவாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல்சுற்று ஆட்டத்தில் அவர், தென்னாப்பிரிக்காவின் Steven Rojas-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

எகிப்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் லஷ்மன்-ஜெர்மனியின் Cedric Stanke இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 7-6, 6-2 என்ற செட்கணக்கில் ஸ்வீடனின் Jonas Eriksson Ziverts-பிரான்ஸின் Hugo Pierre இணையை வென்றது.

>>>>>><<<<<<

ஆசிய இளையோர் விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவின் சார்பில் பதக்கங்களை வென்றவர்களுக்கு பரிசுத்தொகையை இந்திய ஒலிம்பிக் சங்கம் அறிவித்துள்ளது.

பஹ்ரைனில் நடைபெற்ற இப்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 5 லட்சம் ரூபாயும், வெள்ளிப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 3 லட்சம் ரூபாயும், வெண்கலப்பதக்கம் வென்றவர்களுக்கு தலா 2 லட்சம் ரூபாயும் பரிசுத்தொகையாக வழங்கப்படவுள்ளது.

இப்போட்டியில் இந்தியா, 13 தங்கம், 18 வெள்ளி, 17 வெண்கலப்பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

மகளிர் லீக் கால்பந்துப் போட்டி, அடுத்த மாதம் 20ஆம் தேதி தொடங்கும் என்று இந்திய கால்பந்து சம்மேளனம் அறிவித்துள்ளது.

>>>>>>END<<<<<<